# LORDS
# CLUBS INTERNATIONAL

**Govt. Reg. No.:1359/2013**

**INTERNATIONAL SOCIAL SERVICES**




**25 Years**

**Best Social Worker**

## Lords மா பால்ராஜ்

Founder | International President

25 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவில்
சமூக சேவகர் ம.பால்ராஜ் அவர்களால் துவங்கப்பட்ட
அனைத்து மதங்களைச் சார்ந்த மக்களுக்கான
இயக்கமான
பரிசுத்தப் பறவைகள் மக்கள் நல இந்தியக் கழகம்
என்னும் மாபெரும் இயக்கம் 2013 ஆம் ஆண்டு
லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டெர்நேஷனல் என்று அரசு
பதிவு செய்யப்பட்டு உலகம் முழுவதும் சேவை
செய்துவருகின்றது...

# LORDS
## CLUBS INTERNATIONAL

பொதுமக்கள் பலர் விரும்பி

# இலவசமாக கம்ப்யூட்டர் படிக்கலாம் வாங்க...



கம்ப்யூட்டர் யுகத்தில் நாம் அனைவரும் வாழ்ந்து கொண்டு இருக்கிறோம். கிராமம் முதல் நகரம் வரை கம்ப்யூட்டரின் செயல்பாடுகள் அதிகரித்துக் கொண்டே வருகிறது.

இதனால் பாமரன் முதல் படித்தவன் வரை கம்ப்யூட்டரை பற்றிய அறிவு பெற வேண்டிய சூழ்நிலை உள்ளது. ஆனால் கம்ப்யூட்டர் படிக்க அனைவராலும் முடியாது.

இதற்கு காரணம் கம்ப்யூட்டர் கல்விக்கு அதிக பணம் செலவாகி விடுகிறது. இதனால் ஏழை எளியவர்களுக்கு கம்ப்யூட்டர் கல்வி கனவாக உள்ளது. ஒரு சில ஏழை எளியவர்கள் கஷ்டப்பட்டு கம்ப்யூட்டர் கல்வியை படிக்கிறார்கள். இதனால் ஏழை எளியவர்களுக்காக கம்ப்யூட்டர் கல்வியை தமிழகம் முழுவதுக்கும் ஒரு என்ஜினீயர் இலவசமாக சொல்லி கொடுத்து வருகிறார்.

நாகை மாவட்டத்தை சேர்ந்த பால்ராஜ், ஊன முற்றோருக்கு கம்ப்யூட்டரை கற்று கொடுத்து வருகிறார்.

இது மட்டுமல்லாமல் மற்றவர்களுக்கு மாதம் 200 ரூபாய் என்ற குறைந்த கட்டணம் வசூலிக்கப்படுகிறது. இவர்களுக்கு கம்ப்யூட்டர் தொழில் கல்வி அளிக்கப்பட்டு இன்று பலர் நல்ல வேலையில் உள்ளனர்.

பால்ராஜ் திருச்சி மட்டுமல்லாமல் தமிழகம் முழுவதும் உள்ள ஏழை மற்றும் அனைவருக்கும் கம்ப்யூட்டர் சொல்லி கொடுக்கும் நோக்கத்தில் செயல்பட்டு வருகிறார். ஊனமுற்ற மாணவர்களுக்கு கவுன்சிலிங் கொடுத்து அவர்களது வாழ்க்கையில் நம்பிக்கை தீபத்தை ஏற்றி உள்ளார்.

திருச்சியில் உள்ள இந்த இலவச கம்ப்யூட்டர் மையத்துக்கு அனைவரும் சென்று கம்ப்யூட்டரை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

Free Supplement to the Maalai Malar Issue dated 28-1-2006

மாலைமலர் திருச்சி ஜனவரி 28, 2006

LORDS
CLUBS INTERNATIONAL



பரிசுத்தப் பறவை மக்கள் நல இந்திய கழக நிறுவன தலைவர் ம.பால்ராஜ் ஊனமுற்றவர்களுக்கு இலவச கம்ப்யூட்டர் தொழிற்கல்வி வகுப்பு நடத்துகிறார்.

ஊனமுற்றவர்களுக்கு

# இலவச கம்ப்யூட்டர் கல்வி

திருச்சி, ஜுன் 20–

பரிசுத்தபறவை மக்கள் நல இந்தியக்கழக நிறுவனரும் தலைவருமான பால்ராஜ் தமிழகம் முழுவதும் உள்ள ஊனமுற்றவர்களுக்கு கம்ப்யூட்டர் தொழிற் கல்வியை இலவசமாக கற்றுக்கொடுத்து வருகிறார். அவர் விடுத்துள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

வணிக ரீதியாக இயங்கி வரும் அனைத்துச் கல்வி நிறுவனங்களும் அரசுடமையாக்கப்பட்டு அதில் தரம்வாய்ந்த கல்வி நிறுவனங்களை மட்டும் தேர்ந்தெடுத்து அதன் வழியில் அனைத்து நிறுவனங்களையுமே ஒரே மாதிரியான உயர்தர கல்வியாக மாற்றி இந்தியா முழுவதும் எல்.கே.ஜி. முதல் டிகிரி வரை, இன்ஜினீரியங் முதல் துவக்க கல்வி வரை அனைத்து வகையான கல்வியையும் கிராமத்திலிருந்து மாநகர் வரையில் உள்ள அனைத்து மாணவர்களுக்குமே பாகுபாடின்றி இலவசமாக கிடைக்க செய்ய வேண்டும். தற்போதைய காங்கிரஸ் ஆட்சி இதை நிறைவேற்றி தரவேண்டும் என்று கூறியுள்ளார்.

சமச்சீல் கல்வி உருவாகவும் இலவச கல்வி உருவாகவும் நான் விதைத்திட்ட நாள் 20.6.2006 ஆனால் நான் கேட்ட சமச்சீர் கலவியும் கிடைக்கவில்லை இலவச கல்வியும் கிடைக்கவில்லை ஏமாற்றம் மட்டுமே கிடைத்தது.

நான் கேட்ட சமச்சீர் கல்வி ஜப்பான் போன்ற வளர்ந்த நாடுகளில் உள்ள உயர்தர கல்வி போன்றுதான் கேட்டேன். ஆனால் தற்போது தமிழகத்தில் இவர்கள் கொடுத்த சமச்சீர் கல்வியோ அக்கால கஜின் படை ஏடுப்பும், அதே பெரியார் வாழ்க்கைவரலாறு கதைகளும் தான். மாணவர்களை மீண்டும் மழுங்க வைக்கின்றனர் இந்த அறிவற்ற அரசியல் தலைவர்கள்.

பாதுகாப்பு போடப்பட்டுள்ளது.

# இன்டர் நெட்டில் பெண் நிர்வாணத்தை ஒழிக்க வேண்டும்

## பரிசுத்த பறவை மக்கள் நல இந்திய கழகம் வேண்டுகோள்

திருச்சி, ஆக. 14– இன்டர்நெட்டில் பெண் நிர்வாண படத்தை ஒழிக்க வேண்டும் என்று பரிசுத்த பறவை மக்கள் நல இந்திய கழக தலைவர் பால்ராஜ் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:–

### தரம் வாய்ந்த கல்வி

இந்திய மக்கள் அன்பு, அமைதி, அகிம்சை ஆகிய 3 வர்ண கொடியை ஏற்றி சுதந்திர தினத்தை கொண்டாடுவோம். வணிக ரீதியாக இயங்கி வரும் அனைத்து கல்வி நிறுவனங்களையும் அரசுடமையாக்கப்பட்டு அதில் தரமான கல்வி நிறுவனங்களை தேர்ந்து எடுக்க வேண்டும்.

பின்னர் அதனை ஒருங்கிணைத்து மாணவர்களுக்கு தரம் வாய்ந்த கல்வியை வழங்க வேண்டும்

### ஒற்றுமை

இந்தியாவில் சாதியின் அடிப்படையில் கிடைக்கும் சலுகைகள் மறைந்தால் சாதிகளும் மறைய வாய்ப்பு ஏற்படும்.



பால்ராஜ்

அரசு சலுகை திறமை உள்ள ஏழைகளுக்கும் அனைத்து மதத்தினருக்கும் பாகுபாடு இன்றி திறமையின் அடிப்படையில் கிடைக்க பெறும் பட்சத்தில் நாடு வளர்ச்சி பாதையை காணும். இதன் மூலம் ஒற்றுமையிலும், திறமையிலும் நாடு உயர்ந்து நிற்கும்.

### பெண் நிர்வாணம்

இன்டர்நெட்டிலும், டி.வி.யிலும் ஆபாசம் பெருகி வருகிறது. பெண்கள் இல்லாமல் யாரும் பூமிக்கு வரமுடியாது. எனவே பெண்களை ஆபாச படம் எடுத்து அசிங்க படுத்த கூடாது. பெண்கள் நிர்வாணத்தை காட்டும் இன்டர் நெட் மற்றும் நிறுவனங்களை தடை செய்ய வேண்டும்.

இவ்வாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

LORDS CLUBS INTERNATIONAL

# ரத்ததானம் செய்வோம்



பரிசுத்தப் பறவைகள் மக்கள் நல இந்திய கழகம் என்பது எவ்வித சுய நலமும் இன்றி செயல்படும் இயக்கமாகும். இதன் முக்கியக் குறிக்கோள் மக்கள் நல்ல ஆரோக்கியத்துடனும், எவ்வித மனக்கவலையும் இன்றி உயிர் வாழ வேண்டும் என்பதே ஆகும்.

இவ்வமைப்பின் உறுப்பினர்கள் ரத்ததான முகாம்களை மாதம் ஒருமுறை ஏற்பாடு செய்கிறார்கள். அம்முகாமில் ரத்தம் தேவைப்படுபவர்களுக்கு, எந்த வகையான ரத்தம் தேவைப்படுகிறதோ அந்த ரத்தம் எங்கிருந்தாலும் வரவழைத்து அவர்கள் உயிர் வாழ உதவி செய்கின்றனர்.

இலவச மருத்துவ முகாம்களை ஏற்பாடு செய்து அந்த அந்தத்துறை சார்ந்த மருத்துவர்களை அழைத்து வந்து அவர்களுக்கு தேவையான அனைத்து மருந்துகளும் கொடுத்து தொண்டு செய்து வருகின்றனர்.

ஆதரவற்ற குழந்தைகளுக்கு உதவி செய்து அவர்களின் வாழ்வில் ஒளி ஏற்றுகின்றனர்.

மேலும் அவர்களுக்கு வேலை வாய்ப்பினை ஏற்படுத்தி அவர்கள் தன் சொந்தக்காலில் நிற்க வழி செய்கின்றனர்.

விதவை மற்றும் முதியோருக்கு அரசின் உதவித்தொகை பெற அனைத்து வகையான நடவடிக்கைகளும் மேற்கொண்டு அவர்களுக்கு உதவித்தொகை கிடைக்க வழி செய்கின்றனர். எவ்வித பலனும் எதிர்பாராமல் இதன் தலைவரும் நிறுவனருமான ம. பால்ராஜ் அனைத்துதரப்பினரின் பாராட்டை பெற்று வருகிறார்.

LORDS CLUBS INTERNATIONAL

# “ஸ்டாலின் தேடிவந்து ஆதரவு கேட்டார்!”

பால்ராஜ்



ஏழைகளை முன்னேற்றுவதற்கென்றே தாங்கள் இருப்பதாகத்தான் எல்லாக் கட்சிக்காரர்களும் சொல்வார்கள். ஆனால் ‘ஏழைகள் முன்னேற்றக் கழகம்’ என்றே ஒருவர் கட்சி நடத்துகிறார். கட்சியின் நிறுவனர், தலைவர் ம.பால்ராஜ். எப்படி ஏழைகளை முன்னேற்றப் போறாராமாம்?

“நாகப்பட்டினம் என் ஊர். சின்ன வயசுலேயே என் அப்பாவை இழந்துட்டதனால, நானேதான் என் பாதையைத் தீர்மானிச்சுக்கணும்னு ஆகிடுச்சு. நாலு பேருக்கு நல்லது பண்ணணும், எதையாவது சாதிக்கணும்னு தோணும். தாத்தா காசுல சாஃப்ட்வேர் படிச்சேன். சென்னையில வேலைக்குச் சேர்ந்தேன். பெரிய சைஸ்ல வரைஞ்ச ஓவியங்களை அதோட ஒரிஜினல் கெடாம, 20 எம்.பிக்குள்ள சுருக்கணும்னு, ஜப்பான்காரங்களாலேயே செய்ய முடியாத ஒரு புராஜெக்ட் எங்க கைக்கு வந்துச்சு. பலரும் முடியாதுனு சொன்னாங்க. நான் துணிஞ்சேன். 20 எம்.பி இல்லை... ரெண்டே எம்.பி–யில அந்த ஓவியத்தைச் சுருக்கி அசத்தினேன். பலரும் பாராட்டினதோட, அமெரிக்காவுல வேலைக்கும் கூப்பிட்டாங்க. மறுத்தேன்.



LORDS
CLUBS INTERNATIONAL




கண்டிப்பா வரணும்னு கட்டாயப்படுத்தினாங்க. வேலையை விட்டுட்டேன். ஏன்னா, எனக்கு இந்தியாவுல இருந்து மக்களுக்குச் சேவை செய்யணும்னுதான் ஆசை". 'சிவாஜி' ரஜினியின் அறிமுகக் காட்சிபோல ஆரம்பிக்கிறார் பால்ராஜ்.

"வேலையை விட்டதும், 'பரிசுத்தப் பறவைகள் மக்கள் நல இந்தியக் கழகம்' (கொஞ்சம் கஷ்டமாதான் பாஸ் இருக்கு!) என்ற அமைப்பை ஆரம்பிச்சு ஏழை, எளிய மக்களுக்கு உதவிகள் செஞ்சேன். இலவசமா கம்ப்யூட்டர் சொல்லிக்கொடுத்தேன். ஊனமுற்றோருக்கு உதவிகள் செஞ்சேன், படிக்க வெச்சேன். 2010 நாடாளுமன்றத் தேர்தல்ல, எங்க அமைப்போட வளார்ச்சியைப் பார்த்து மு.க.ஸ்டாலின் நேரடியாகவே வந்து ஆதரவு கேட்டார். 'அமைப்பு சார்பாக ஆதரவு கொடுத்தா நல்லா இருக்காது. தனியா கட்சி ஆரம்பிச்சுக்கிறேன். அப்புறம், கட்சிக்காரங்ககிட்ட பேசி முடிவைச் சொல்றேன்'னு சொல்லிட்டேன். அப்போதான், மக்களுக்கு நல்லது பண்ண நாம ஏன் அரசியல் கட்சி ஆரம்பிக்கக் கூடாதுனு தோணுச்சு. 2010–ல 'ஏழைகள் முன்னேற்றக் கழகம்'னு ஆரம்பிச்சுட்டேன்!" என்றவர், கட்சியின் கொள்கைகளை விளக்குகிறார்.

"ஸ்டாலினைச் சந்திச்சப்போ, 'சமச்சீர் கல்வி கொண்டு வரணும்'னு கோரிக்கை வெச்சோம். இன்னைக்கு அது சாத்தியமாயிருக்கு. அதுக்குக் காரணம் நாங்கதான். மதுவிலக்கை முதல்ல பேசியதும் நாங்கதான். ஆறேழு வருடங்களுக்கு முன்னாடியே 'வாரம் ஒருமுறைதான் மதுக்கடையைத் திறக்கணும். பார்களில் மட்டும்தான் விற்பனை நடக்கணும்'னு அறிக்கை வெளியிட்டோம். ஏழையோ, பணக்காரனோ எல்லோருக்கும் ஒரு என்டர்டெயின்மென்ட் வேணும். அதுக்குதான் இந்தத் திட்டம். மற்றபடி, ஏழைகள் முக்கியப் பொறுப்புக்கு வரணும். எல்லோருக்கும் இலவசக் கல்வி கிடைக்கணும்ங்கிறது எங்க முக்கியக் கொள்கைகள். ஏன்னா, எங்கேயுமே ஏழைகளை மதிக்க மாட்டேங்கிறாங்க. இந்த நிலைமைக்குக் காரணம்

அரசியல்வாதிங்கதான். குண்டூசியில ஆரம்பிச்சு, நாம பயன்படுத்துற எல்லாமே வெளிநாடுகள்ல உற்பத்தியாகுது. அதை நாம தயாரிச்சா, வேலையும் கிடைக்கும். நாடும் முன்னேறும். யாரு பண்றா?" என்றவர், கதகளி ஆட ஆரம்பித்தார்.

"ஜெயலலிதா இலவசத்தைக் கொடுத்து, அதுல ஸ்டிக்கரையும் ஒட்டிட்டுப் போறாங்க. இதெல்லாம் யாரோட காசு? நம்ம காசு. ஒரு மாநாடு நடத்த கோடிக்கணக்குல செலவு பண்றாங்க. லட்சக்கணக்குல பேனர் அடிக்கிறாங்க. இந்தக் காசெல்லாம் எங்கே இருந்து வருதுனு நினைக்கிறீங்க? நம்ம பணம் பாஸ். எந்த அரசியல்வாதியாவது சொந்தப் பணத்துல மக்களுக்குச் சேவை செய்றாங்களான்னா, இல்லை. ஆனா, தினமும் விதவிதமான போஸ்டர்ஸ் அடிச்சு ஒட்டுறாங்க. இதனால யாருக்கு என்ன பயன்? ஒண்ணும் கிடையாது. முக்கியமா, எப்பவோ இறந்துபோன தலைவர்களுக்குப் பிறந்தநாள் கொண்டாடுறதையே எங்க கட்சி கண்டிக்குது. எவ்வளவு பெரியத் தலைவர்களா இருந்தாலும், அவங்க மேல இருக்கிற அன்பும், மரியாதையும் மனசுல இருந்தாப் போதும். பணத்தை விரயமாக்காதீங்க. ஏன்னா, இந்தியாவுல இதுவரை அடிச்ச அரசியல் பேனர், போஸ்டர், நோட்டீஸுக்கான பணத்தை வெச்சே இந்தியாவை வல்லரசு ஆக்கியிருக்கலாம்" என்று கொந்தளித்து கொப்பளித்தவரிடம், "உங்க கட்சியோட திட்டங்களைச் சொல்லுங்க" என்றேன்.



"10,000 சம்பளம் வாங்குற சாதாரண மனுஷனை 50,000 சம்பளத்துல எம்.எல்.ஏ ஆக்குறோம். அவனும் சந்தோஷப்படுவான். மக்களுக்கும் ஏதாச்சும் நல்லது பண்ணணும்னு நினைப்பான். இதுக்கான விழிப்பு உணர்வை மக்களுக்கு முதல்ல கொடுக்கணும். விவசாயிகள் நிலத்தைத் தரிசா போடக் கூடாது. எப்பவும் ஏதாவது ஒரு பயிர் அவங்க நிலத்துல விளைஞ்சுக்கிட்டே இருக்கணும். அதுக்கு அரசாங்கம் உதவணும். எங்க அமைப்பு மூலமா கிடைக்காத அரிய வகை ரத்தங்களும் உடனுக்குடன் கிடைக்கும்படி ஏற்பாடு பண்ணியிருக்கோம். இப்பவே, ஒரு நாளைக்குப் பத்து உயிர்களையாவது காப்பாத்துறோம். இதை இன்னும் விரிவுபடுத்தணும். இப்போ, என் கட்சியில 5,000 பேர் உறுப்பினரா இருக்காங்க. விளம்பரமே இல்லாமதான் இந்தக் கூட்டத்தைத் திரட்டியிருக்கேன்" என்கிறார்.

ஆமா, ஏழைகளை எப்படி முன்னேற்றப் போறீங்கனு கடைசிவரைக்கும் சொல்லவே இல்லையே!

–கே.ஜி.மணிகண்டன்



LORDS
CLUBS INTERNATIONAL

### அரிமா சங்கத்தின் அநியாயத்தைத் தட்டிக்கேட்கிறார்

# ஏழைகள் முன்னேற்றக் கழகத் தலைவர், அரிமா ம.பால்ராஜ்!



ஏழைகள் முன்னேற்றக் கழகத்தின் தலைவர் ம.பால்ராஜ் எப்போதுமே ஏழைமக்களின் பொருளாதார முன்னேற்றத்திலும், சேவையிலும் மிகுந்த ஆர்வமுடையவர்.

அவர் எந்தப்பிரச்சனையைக் கையில் எடுத்தாலும் அது நாடு முழுவதும் எதிரொலிக்கும்! அதில் அவர் சாதனையே பதிலளிக்கும்!

இந்தியர்களின் பணத்தை அமெரிக்க-அரிமா சங்கம் சுரண்டுவது ஏன்? என்று கேள்வி எழுப்புகிறார். அதைத் தடுக்கவேண்டும் என்று குரல் கொடுக்கிறார்! அதற்கு மாற்றாக இந்தியா செய்யவேண்டிய விஷயங்களுக்கு ஆலோசனையும் கூறுகிறார்! அவர் இதைப்பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும், மேதகு ஆளுநர் அவர்களுக்கும் மற்றும் பல ஆட்சியாளர்களுக்கும் அனுப்பியுள்ள கடிதம் வருமாறு :-

அரிமா சங்கம் என்று ஒன்று அயல்நாட்டவரால் ஆரம்பித்து உலக நாடுகள் மத்தியில் நல்ல வரவேற்பும் ஒற்றுமையும் நிலவி வருகிறது. இதில் ஒவ்வொரு வருடமும் ஆண்டு சந்தாவாக ஓர் உறுப்பினருக்குச் சுமார் 3500 இந்திய ரூபாய் டாலராக மாற்றப்பட்டு அயல் நாட்டிற்குச்சென்று மறைகிறது. இதில் பல இலட்சக்கணக்கான இந்திய மக்களும் பல கோடிக்காணக்கான ரூபாயை ஆண்டுச்சந்தாவாகக் கொடுத்து வருகின்றனர்.


இந்த நிறுவனத்தின் முதலீடு என்னவென்றால், இணையத் தளம் மட்டும்தான். உறுப்பினர்களுக்கு இந்த நிறுவனம் அளிப்பது அரிமா (லயன்) என்னும் வார்த்தையைப் பெயருக்கு முன் எழுதிக் கொள்வதும் அழைத்துக் கொள்வதும் தான். இதற்காகத்தான் இந்த ஆண்டுச் சந்தாதொகை. இத்தொகை நம் இந்தியாவில் உள்ள அனைத்து மாநிலங்களில் இருந்தும் அயல் நாட்டிற்கு இத்தொகை சென்று மறைகிறது.

லயன் நம் இந்திய நாட்டின் சின்னம். அந்தச் சின்னத்தையும் வார்த்தையைம் வைத்துக் கொண்டு அயல்நாட்டவர் நம் இந்தியர்களை ஏமாற்றிப் பணம் பறிப்பது. இந்தியர்களின் ஏமாளித்தனம் கண்டு மிகுந்த வேதனை அளிக்கிறது. அதுமட்டுமல்லாமல் இந்திய ரூபாய் இந்தியாவை விட்டு வெளியேறுவது இந்தியாவிற்கே பேரிழப்பாகிறது. இந்தியா ஏழைநாடாக இருக்க இதுவும் ஒரு காரணமாக நான் கருதுகிறேன்.


ஆகவே, இந்தப் பல்லாயிரம் கோடி இந்திய ரூபாயை ஆண்டு தோறும் அயல்நாட்டுக்கு சென்று மறைவதை இந்திய அரசு தடுத்து நிறுத்தி, இந்தியாவின் பணம் இந்திய அரசுக்கே கிடைக்கச் செய்து, இணையத் தளம் ஏற்படுத்தி, தற்போதுள்ள அரிமா உறுப்பினர் பதிவை மாற்றி அமைத்து, அரிமா (லயன்) என்ற வார்த்தையை உறுப்பினர்கள் பெயருக்கு முன் எழுதிக் கொள்ளவும், அழைத்துக் கொள்ளவும் இந்திய அரசு ஆணை பிறப்பிக்க வேண்டும் என அரிமா உறுப்பினராகவும் ஏழைகள் முன்னேற்றக் கழகத் தலைவராகவும் இருக்கும் நான் வேண்டி விரும்பிக் கேட்டுக்கொள்கிறேன்.



LORDS CLUBS INTERNATIONAL



ர் திருமண
லைமையில்
த வாழ்த்து
அய்யனார்,
ான முக்கிய



தித்தார்கள்
பேசிபோன்ற
ஆயுதபூஜை
ல் பங்கேற்ற

# மாட்டு இறைச்சிக்கு தடை விதிக்க வேண்டும்



சென்னை, நவ.16–

மாட்டுஇறைச்சிக்குஇந்தியா முழுவதும் தடை விதிக்க வேண்டும் என்று அறிக்கை ஒன்றைஅறிவித்துள்ளார்லாரட்ஸ் கிளப்ஸ் இண்டர்நேஷனல் சர்வதேசதலைவர்ம.பால்ராஜ்,.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் கூறியிருப்பதாவது,

"விலைகுறைவாகஉள்ளமாட்டுஇறைச்சியை அதிகமாக விரும்பி தொடர்ச்சியாக சாப்பிட்டு வருவதால் அறிவு சற்று மந்தமவதால், கோபம் அதிகரித்து பல்வேறு குற்ற செயல்களிலும் ஈடுபடுகின்றனர்.

மாட்டு இறைச்சியை குழந்தைகளுக்கும் கொடுத்து வளர்ப்பதனால் ஆண்பெண் பிள்ளைகள் 14 வயதிலேயே 24 வயதுடைய தோற்றத்தையும் வளர்ச்சியையும் பெற்று விடுகின்றனர்.

இதனால் முக அழகும் பாதிக்கப்பட்டும் இவர்கள் தரப்பில் உள்ள பெண்கள் 24 வயதில் 48 வயதுடைய உடல் தோற்றத்தையும் வளர்ச்சியையும் அடைந்து அவர்கள் இளம்வயதிலேயே முதிர்வடைந்து காணப்படுகின்றனர்.

மாட்டு இறைச்சியை அதிகமாக சாப்பிடுவதனால் உடலில் கொழுப்பு சக்தி அதிகரித்து வேர்வையானது துர்நாற்றம் வீசுகின்றது.

சிலருக்கு குறைந்த வயதிலேயே சர்க்கரை நோய் வருவதற்கும் அதிக வாய்ப்புள்ளது.

இப்படிப் பட்ட கேடுகளை விளைவிக்கும் மாட்டு இறைச்சியை உடனடியாகஇந்தியா முழுவதும்தடைவிதிக்க வேண்டும் என்றும் மத்திய மாநில அரசிடம் இந்த கோரிக்கையை முன் வைக்கிறோம். என்று கூறியுள்ளன அந்த அறிக்கையில்.



முதல
கொண்ட ர



LORDS CLUBS INTERNATIONAL

பழனிசாமி கூறியதாவது:
* அனைத்து துறை

மழை பெய்துள்ளது.
*நிவர் புயல்காரணமாக

*தாழ்வான பகுதிகளில்
தேங்கிய நீரை வெளியேற்ற

அளிக்கிறது
இவ்வாறு அவர் கூறினார்.

# இந்தியா முழுவதும் நீர்நிலைகளை பாதுகாக்கவேண்டும்

## லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல் சர்வதேச தலைவர் கோரிக்கை

சென்னை : நவ.28–

நிவர் புயல்காரணமாக லார்ட்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல்சர்வதேச தலைவர் ம.பால்ராஜ் நீர்நிலைகளைப் பற்றிய ஆய்வினை நேரிடையாக சென்று ஆய்வுசெய்துள்ளார் அதில்சென்னை புறநகரில் உள்ள பள்ளிக்கரணையில் உள்ள ஏரிகளையும், வனத்துறையைச் சார்ந்த சதுப்புநில பகுதியையும் நேரில்சென்றுபார்வையிட்டு வேளச்சேரி ராம்நகர் பாதிப்பை முதலில் பார்வையிட்டு விட்டு அங்கிருந்து வேளச்சேரிடு தாம்பரம்ரோட்டிற்குசென்று அங்குபலஊர்களில்இருந்து வரும் நீர்வடிகால்களையும் பார்வையிட்டுவிட்டுஒருசில அரசியல்வாதிகளும்அரசும் சேர்ந்து ஆக்கிரமித்துள்ள பலநீர்நிலைபகுதிகளையும்



பார்வையிட்டுவிட்டு இறுதியில்வனத்துறையைச் சார்ந்தபலஆயிரக்கணக்கான ஏக்கர்நிலப்பரப்பில்உள்ள சதுப்புநில பகுதியையும் பார்வையிட்டார்.

அந்த சதுப்புநில பகுதியில்தான் பழைய மகாபலிபுரம் ரோடு தரமணியில் ஆரம்பமாகி சோழிங்கநல்லூர்வரையிலும் மேலும் வேளச்சேரி பகுதி முதல் மீனம்பாக்கம் ஏர்போர்ட்வரையில்உள்ள பலஊர்களிலும்ஏறத்தாழ தென்சென்னைபகுதியில் உள்ள அனைத்துஊர்களில் உள்ளமழைவடிநீர்கள்முதல் ஏரியின்வடிநீர்கள்வரையில் அனைத்தும்வந்தடைந்து தேக்கமடைவதை கண்டறிந்தார்.

மேலும் இநத சதுப்புநிலத்தை அரசு தூர்வாராமல்பலஇடங்களில் குப்பைகிடங்குகள்அமைத்து குப்பைகளைக் கொட்டி படிப்படியாக மூடி வருவதையும்கண்டறிந்தார்.

இதனால்தான்இப்பகுதி மக்கள்பெரும்வெள்ளத்தின் போதுபலமுறைஉயிர்சேதம், வாகனசேதம் மற்றும், பொருட்கள்மற்றும்வீடுகள் சேதம் அடைந்து பெரும் பாதிப்புள்ளாகின்றார்கள் என்பதையும்கண்டறிந்தார்.

இதனால் இவர் மத்திய மாநில அரசுக்கு உடனடி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார் அதில் கூறியிருப்பது என்னவென்றால்தயவுசெய்து தமிழகமாநிலஅரசும்மத்திய அரசும், நம் பூமி மக்களின் வாழ்வாதாரத்திற்காக நமக்குமேடுபல்லம்போன்ற இயற்கையாகநமக்குஅளித்த நிலப்பரப்பு நீர்நிலை தேக்கப்பகுதிகளை நீங்கள் சுத்தம் செய்து தூர்வாரி பாதுகாத்துபொதுமக்களை பாதுகாக்க வேண்டுமே தவிர குப்பைகளைக் கொட்டி துத்து அதில் அடுக்குமாடிகட்டிடங்கள் கட்டுவதை தவிருங்கள் இதை இங்குமட்டுமல்ல நமது விவசாய பூமியான இந்தியா முழுவதும் அனைத்துப்பகுதிகளிலும் செயல்முறைபடுத்திஇந்தியா முழுவதும் நீர்நிலைகளை பாதுகாக்கவேண்டும்.

பகுதியில்குழந்தையின்வீடு

கண்ணீருடன் தவித்து

நன்றிதெறிவிக்கப்பட்டது.

# பாமக வாரிசு அரசியல் உண்மைகளை உடைக்கும் பால்ராஜ்

சென்னை, டிச.08– பாமகவாரிசு அரசியல் குடும்பமான ராமதாஸ் அன்புமணியின் அந்தரங்க உண்மைகளைப்புட்டுபுட்டு வைக்கும் லார்ஸ் கிளப்ஸ் இன்டர்நேஷனல்சர்வதேச தலைவர் ம.பால்ராஜ்.

இவர் அளித்துள்ள பேட்டியில்கூறியிருப்பதாவது

தேர்தல் நேரத்தில் அதிகமான பரபரப்பு காட்டினால் மட்டும்தான் அதிககருப்புபணப்பெட்டிகள் அக்கட்சித்தலைவர்கைக்கு ஏதேனும் ஒரு கருப்பு பணம் உள்ள அரசியல் ஆளும் கட்சியிலிருந்தோ, அல்லதுகருப்புபணம்உள்ள எதிர்கட்சியில் இருந்தோ வந்துசேரும் என்ற உள் நோக்கத்தில் பரபரப்பு காட்டுவதற்காகசிலதினங்கள் முன்புஇந்தியப்பொதுமக்கள் பயணிக்கும்மத்திய அரசின் ஓடும்ரயிலையேவழிமறித்து கற்களால்சரமாரியாகதாக்கி ரயில்ஓட்டுனரையும்கொலை வெறி தாக்குதல் நடத்தச் செய்ததற்குகுடும்ப அரசியல் செய்யும்அக்கட்சித்தலைவர் ராமதாஸ், அன்புமணி இருவரையும்மத்திய மாநில அரசுஉடனடியாககுண்டர்கள் தடுப்புப்பிரிவில்குற்றவியல் வழக்குப்பதிவுசெய்துதக்க தண்டணைவழங்கவேண்டும்.

இவர்கள் ஏற்கனேவ பல ஆண்டுகளாய் திண்டிவனம்,பாண்டிச்சேரி, சேலம், கும்பகோணம், பெருங்களத்தூர்,தாம்பரம், சென்னைபோன்றபலஊர் ரயில் நிலையங்களிலும் ஏதேனும்ஒருகாரணத்தை முன்வைத்து அத்துமீறி ரயில்மறியல்என்றபெயரில் கலவரங்கள் ஏற்படுத்தி பொருட்சேதங்கள் ஏற்படுத்தியும் பொதுமக்களுக்கு



மிகமோசமான இடையூர் ஏற்படுத்தியும் பரபரப்பு ஏற்படுத்தியுள்ளது குறிப்பிடத் தக்கது.

இவர்கள் தாக்குதல் நடத்தும் அந்த ஓடும் ரயிலில் திறமையற்ற புதிய இரயில் டிரைவராக வேறு யாரேனும்இருந்திருந்தால் ஆயுதங்களுடன் வரும் கலவரக்காரர்களைப்பார்த்து பயந்து ஓடி இரயிலை விட்டு குதித்து தப்பிக்க முயற்சித்திருந்தால் அந்த இரயில் நிற்காமல் ஓடி கவிழ்ந்து அதில் பயணித்த மொத்த பயணிகளின் உயிரும்போயிருந்திருக்கும்.

ராமதாஸ், அன்புமணிராமதாஸ்மட்டுமே குடும்பஊழல்செய்வற்காக தொண்டர்கள்என்றபெயரில் குண்டர்களை ஏவிவிட்டு இவர்கள்தாக்குதல்நடத்தச் செய்துவிட்டு தலைமை குண்டர்கள் இருவரும் கலவர போராட்டத்தில் கலந்துகொள்ளாமல் வீட்டிலேய சொகுசாக அமர்ந்து கொண்டு வேடிக்கைபார்த்துரசித்துக் கொண்டிருக்கின்றார்கள் இவர்களின்சுயஊழலுக்காக பொது மக்களின் உயிரோடும் மத்திய அரசின்உடமைகளோடும் விலையாடுவதைஇத்துடன் நிறுத்திக்கொள்ளவேண்டும்.

இதில்என்னஒருகாமெடி என்றால் தொண்டர்கள் என்றபெயரில்குண்டர்களை ஏவியஇவர்கள்மீதுஎந்தஒரு நடவடிக்கையும்எடுக்காமல் ஆயுதமாகஆயுதத்துடன்வந்த 350அப்பாவிகுண்டர்களின் மீதும்இம்முறையும்சின்னஞ் சிறுவழக்குகளாய்பதிவுசெய்து கைதுசெய்ததுபடம்காட்டி டிவியில் போடுவது கேலிக்கூத்தாகத்தான் உள்ளது.வழக்குநீதிமன்றம் ஜாமீன்அதைதொடர்ந்து30 நாட்கள் அலைந்து திரிந்து காவல்நிலையங்களுக்குச் சென்றுகையொப்பம்இடுதல் என்று பாதிக்கப்படுவது பாவப்பட்ட 350 அப்பாவி குடும்பங்கள்.

சொகுசாய் சொத்துக் குவிப்புகளுடன் உல்லாசமாய் வாழ்வது இக்கட்சித் தலைவரின் ஒற்றைக்குடும்பமாம்.

அமைதிப்பூங்காவான நம்தமிழகத்தில்தொடர்ந்து தொடர்போராட்டங்கள்என்ற பெயரில் பல கலவரங்கள் ஏற்படுத்திதமிழகமக்களின் அமைதியைக் குலைத்து இவர்கள் இதுவரையில் செய்துள்ள இந்த மிகக் கொடூரமான அனைத்து செயல்களுக்கும் இந்திய அரசியல் சட்டம் தகுந்த தண்டனையைஉடனேவழங்கி ராமதாஸ்அன்புமணிஇவர்கள் இருவரையும் உடனடியாக குண்டாசில் கைது செய்ய வேண்டும்.மேலும்இவர்கள் போராட்டம்என்றபெயரில் இதுமாதிரியானதீயவழியில் கலவரம்செய்துஇதுவரையில் சொத்துக்குவிப்புகள் செய்துள்ள பல ஆயிரம் கோடி ரூபாய் மதிப்புள்ள மொத்த ஊழல் அசையும் அசையாசொத்துக்களையும் இந்திய அரசு உடனடியாக இவர்களிடமிருந்துபறிமுதல் செய்யவேண்டும் என்றும் கேட்டுக் கொண்டுள்ளார் லார்ட்ஸ் ம.பால்ராஜ்.








# LORDS
## CLUBS INTERNATIONAL